விலை ரூபா 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 12 வெள்ளிக்கிழமை (28.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 221

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## ரோந்து சென்ற இராணுவம் மீது நேற்று கிளைமோர்த் தாக்குதல்

### மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ்.வீதி பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நேற்றுக் காலை 7மணியளவில் இடம் பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

கே.கே.எஸ்.வீதி ஊடாக ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவ் வீதியில் உள்ள பழைய இரும்புப் பொருட்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றின் பெயர்ப் பலகையிலேயே இக் குண்டு பொருத்தப்பட்டி (08 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர்த் தாக்குதலில் சிக்கி பத்திரிகை விநியோகஸ்தர் பலி

### நவக்கிரியில் நேற்று அதிகாலை சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நவக்கிரியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் பத்திரிகை விநியோகஸ்தர் ஒருவர் பலியானார்.

நேற்று அதிகாலை 4மணியளவில் தனது வீட்டில் இருந்து அலுவலகம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் வைத்து கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானார்.

கிளைமோரில் சிக்கி மரணமடைந்தவர் பத்தமேனி அச்சுவேலியைச்சேர்ந்த யாழ். தினக்குரல் பத்திரிகை விநியோகஸ்தரான மரியதாஸ் மனோராஜ் (வயது 34) என தெரிவிக்கப்பட்டது. (08 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் கிபீர் தாக்குதல்

# ஐந்து போராளிகள் உயிரிழப்பு

## முல்லைத்தீவிலும் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரை கதிரவெளியில் கிபீர் விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் ஐந்து போராளிகள் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர்.

மேலும் ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்தனர். நேற்று மாலை இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்க முன்னாள் தலைவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் நேற்றுக் காலை 7 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவர் தனது வீட்டில் இருந்து பருத்தித்துறை பஸ் நிலையம் நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவ்வொள்ளைப் பிள்ளையார் வீதி புலோலி மத்தியைச் (08 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்று இரும்புக்குண்டு மீட்பு

(கொழும்பு)

கொழும்பு புதுக்கடைப் பிரதேசத்தில் இருக்கும் விடுதி ஒன்றை சோதனையிட்ட வாழைத்தோட்டப் பொலிஸார் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 11 கிலோ எடை கொண்ட இரும்புக்குண்டு ஒன்றையும் சில இரும்புத் துண்டுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அந்த விடுதியின் உரிமையாளரையும் அங்கு தங்கியிருந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இரும்புக்குண்டும் இரும்புத்துண்டுகளும் கிளை (08 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் சமாதானம் வேண்டி அமைதி நோன்புப்பிரார்த்தனை

### யாழில் சர்வமதங்கள் இணைந்து ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அமைதி ஏற்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் நாளை சர்வமதங்களின் அமைதி நோன்புப்பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

சமயங்களுக்கு இடையிலான ஒருமைப்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 9 மணிக்கு சிங்கள மகாவித்தியாலயத்தில் இச் சர்வமதப்பிரார்த்தனை இடம் பெறவுள்ளது.

போருமற்ற சமாதானமுமற்ற இன்றைய சூழ்நிலையில் பல விதமான நெருக்கடிகளை மக்கள் சந்தித்து வருகின்றனர்.

இந் நிலையில் மக்களை ஆற்றுப்படுத்தி வாழ்வதற்கான நம்பிக்கையினை ஏற்படுத்த வேண்டிய கடமை ஒவ்வொரு சமயங்களுக்குமுண்டு.

அந்த வகையில் தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மக்கள் விடுபடவும் நாட்டில் வன்முறை நீங்கி சகல மக்களும் சமாதானத்துடன் வாழ்வதற்கும் சர்வமதங்களுக்கிடையேயான புரிந்துணர்வு பலம் பெறவும் அமைதி வழியில் பிரார்த்திப்போமாக என மேற்கண் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வெருகலாறு கால்வாயைத் திறக்கும்வரை இலக்குகள் மீது தாக்குதல் தொடருமாம்

(கொழும்பு)

திருகோணமலை செருவில வெருகலாறு கால்வாயை திறப்பதற்கான தாக்குதலை தொடர்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

திருகோணமலை செருவில வெருகலாறு கால்வாயைத்திறப்பதற்காக அணையை அண்மித்த குறிப்பிட்ட இலக்குகள் மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்படுமென அரச பாதுகாப்புத்தொடர்பான அமைச்சர் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

இந்த கால்வாயைத்திறப்பதற்கு பொறியியலார்களை குறிப்பிட்ட பிரதேசத்திற்கு அனுப்புதற்கான சூழ்நிலை ஏற்படுத்தும் நோக்கிலேயே தாக்குதல் மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ் ஆற்றின் கால்வாய் மூடப்பட்டதால் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக 20 ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகளிடம் பேசுவதற்கு முயற் சித்ததாகவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதனால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் நலன் கருதி, நீரைத்திறந்து விடும் வரை குறிப்பிட்ட இலக்குகள் மீது படையினர் தாக்குதல்களை நடத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

(அ)



கே.கே.எஸ்.வீதியில் நேற்றுக் காலை கிளைமோர்த் தாக்குதல் நடைபெற்ற இடத்தை படத்தில் காணலாம்.

# ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையைத் துதிப்போம்

சைவ சமயிகளுக்கு ஆடி மாதம் ஒரு சிறப்பான மாதமாகும். இந்த மாதத்தின் மகிமையும் மகத்துவமும் மிக்க விரதங்களும் விழாக்களும் வருகின்றன. ஆடிப் பிறப்பு, ஆடிச் செவ்வாய், ஆடி அமாவாசை, ஆடிப் பூரம், ஆடிச் சுவாதி என்ற பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இன்றைய ஆடிப்பூரமானது அம்பிகைக்குரிய பொன்னாளாகும் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியும் அண்ட சராசரங்களுக்கும் அன்னையாக விளங்குகின்ற ஆதி பராசக்தியுமாகிய அம்பிகைக்கு ருதுசாந்தி விழா நடைபெறும் விழா நாளாதலால் இது புனித நாளாகக் கருதப்படுகின்றது.

முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் அளவிறந்த எண்ணிக்கையில்லாத ஆன்ம கோடிகளும் இந்நிலவுலகுக்கெல்லாம் தாயக விளங்குகின்ற லோக மாதாவாகிய அம்பிகையைப் பாடிப்பரவிப் பணிந்தேர்த்தி வணங்கித் துதிக்கின்ற நன்னாள் இந்த ஆடிப்பூரம். அகிலாண்ட நாயகியாக அருள் சுரக்கும் அம்பாள் தன்னுடைய அருட்பிரவாகத்தை அகிலமெங்கணும் அண்ட சராசரங்கள் தோறும் பல்கிப் பெருகிப் பரிணமிக்கும்படி செய்யும் நாள் ஆடிப்பூரம்.

இந்த உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவபெருமான் ஆன்மாக்களின் மீது கொண்ட பெருங்கருணையினால் பஞ்சகிருத்தியங்களையும் புரிகின்கிறார். பிரம்மா என்ற மூர்த்தத்தினால் சரஸ்வதியைச் சக்தியாகக் கொண்டு படைத்தல் தொழில் நடைபெறுகின்றது. விஷ்ணு எனும் மூர்த்தத்தினால் இலக்குமியைச் சக்தியாகக் கொண்டு காத்தல் தொழிலும்.

உருத்திரன் என்ற மூர்த்தத்தினால் காளியைச் சக்தியாகக் கொண்டு அழித்தால் தொழிலும்- மகேஸ்வரன் எனும் மூர்த்தத்தினால் உமையைச் சக்தியாகக் கொண்டு மறைத்தல் தொழிலும்- சதாசிவன் என்ற மூர்த்தத்தினால் பார்வதியைச் சக்தியாகக் கொண்டு அருளல் தொழிலும் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் மின்சாரம் மிக மிக அவசியமானதொன்றாக மனித வாழ்வில் இடம் பிடித்துவிட்டது. மின்சாரம் இல்லாமல் சமுதாயம் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஒரு மின் குமிழ் எரிய வேண்டுமானால் மின்சாரம் வேண்டும். அது இல்லையேல் ஒளிபெற முடியாது. அது போலே சக்தி இல்லாமல் எதுவுமே இயங்க மாட்டாது. 'சக்தி இருந்தால் செய்; இல்லையேல் சிவனே என்று இரு' என்று கூறுவதிலிருந்து சிவபிரான் கூட சக்தியின்றி இயங்க மாட்டார். என்பது புலனாகின்றது.

அம்பிகைக்குரிய தினம் சுக்கிர வாரம். இந்த வெள்ளிக்கிழமை புனித நன்னாளில் ஆடிப்பூரம் அமைந்து வந்திருப்பது மிகவும் விசேஷமாகும். இன்று அதிகாலை புனித நீராடி தோய்த்துலர்ந்த ஆடையைத் தரித்து அம்பிகையைத் தரிசித்து வழிபாடாற்றி விரதமிருப்பது புண்ணியப் பேறு. இன்றைய ஆடிப் பூரத்தில் இயன்றளவு தான தர்மத் செய்து ஏழைகளுக்கு உணவளித்து அமுத சுரபியாக விளங்கும் "அம்பாளின்" திருவருட் பிரவாகத்தில் மூழ்கித்திளைக்க பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருத்தல் வேண்டும்.

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்றபடி அம்பிகையின் அருளின்றி நாம் தெய்வதரிசனம் செய்யவும் முடியாது; ஆடிப்பூர விரதமிருக்கவும் முடியாது 'அவனருளாலே அவன்தான் வணங்கி' ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு இன்றைய ஆடிப் பூரம் வகை செய்யும்; இந்த விரதம் அனுட்டிப்பதற்கும் அம்பாளுடைய அனுக்கிரகம் வேண்டும். 'அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம்

**இன்று ஆடிப்பூர நான்நாள்**

பெறலாம்' என்பதற்கிணங்க நாம் சர்வலோக நாயகியான அன்னையைத் தொழுது அவனியில் நல்வாழ்வு வாழ அவளுடைய இன்னருள் வேண்டிப் பிரார்த்திப்போம்.

இந்த உலகில் மானிட ஜென்மம் எடுத்தவர்களாகிய நாம் இத்தனை துன்பங்களையும் அனுபவிப்பதற்கு காரணம் என்ன தெரியுமா? நம்மிடையே நிலவும் கடவுள் நம்பிக்கையின்மையே யாகும்.

'ஒன்றே குலம் ஒருவனே இறைவன்' என்பதை மனத்தில் எண்ணி எப்போதும் உண்மையே பேசி, பிறர் மனம் புண்படும்படி நடக்காமல் இனிய மொழி பேசி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் தியாக உணர்வு மேலி[illegible]தனை மனிதனாக மதித்து எப்போது வாழத் துவங்குகின்றோமோ அப்போது தான் எமக்கு நற்கதி கிடைக்கும்.

ஆகவே ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையின் பொற்பாத கமலங்களைப் பணிந்து சிந்தித்து வந்தித்துச் சேவித்து அவளுடைய திருவருளுக்குப் பாத்திரமாகி சகல செளபாக்கியங்களும் நிறைந்த வர்ழ்வு வாழ்வோமாக.

சிவநெறி கலாநிதி
*இராசையா ஸ்ரீதரன்*





நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்துக்கு அண்மையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் பலியான பத்திரிகை விநியோகஸ்தரான மரியதாஸ் மனோஜ்ராஜா (வயது 34) என்பவரின் சடலத்தையும் இச்சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் விசாரணை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- திலீவின்பன்)

# ஆவணங்களைப் பரிசீலிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பாதுகாப்பு தரப்பினருக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்யும் போது மோசடி இடம்பெற்றதா என்பதை ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஆவணங்களை பரீட்சிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விசாரணைகளுக்காக பாதுகாப்பு தரப்பினரிடமிருந்து தேவையான ஆவணங்களை ஆணைக்குழு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இராணுவம் மற்றும் கடற்படையினரிற்கு கொள்வனவு செய்ததற்கான ஆவணங்கள் அடங்கியுள்ளன. இந்த ஆவணங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களை விசாரணைக்கு அழைக்க விசாரணைக் குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதி ஆணைக் குழு முன்னாள் கடற்படைத் தளபதி தயாசந்த கிரி கடந்த 24ஆம் திகதி ஆஜராகி சாட்சியமளித்துள்ளார். ஓய்வுபெற்ற நீதியரசர் நிமல் காமினி அமரதுங்க தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை கடந்த 24ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போதே தயாசந்தகிரி சாட்சியமளித்தார்.

கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவில் மோசடி இடம் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டதையடுத்தே இந்த ஜனாதிபதி ஆணைக் குழு அமைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## இராசி பலன்

**28.07.2006**
**(ஆடி 12, வெள்ளிக்கிழமை)**
**திருதியை பிற்பகல் 3.11 மணிவரை**
**இராகுகாலம் 10.32-12.02 மணிவரை**
**சுபநேரம் 6.02-7.32 மணிவரை**
**ஆடிப் புரம்**

| | |
|---|---|
| மேடம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக்குறைவு. |
| இடபம் | ரோக நிலை, தன விரயம், மனச்சஞ்சலம், காரிய தாமதம். |
| மிதுனம் | மனோதைரியம், நற்கீர்த்தி, அந்நியர் சந்திப்பு, கூட்டு முயற்சி. |
| கடகம் | போசன சுகக்குறைவு, அதிக செலவு, காரிய தாமதம், விவாதம். |
| சிங்கம் | வெகுமானம், சயன சுகம், மாதர் நட்பு, போசன நன்மை. |
| கன்னி | காரிய அலைச்சல், பிறருக்கு உதவுதல், தனவிரயம், சிந்தனை மிகுதி. |
| துலாம் | தனதானிய சேர்க்கை, சயன சுகம், குடும்ப சுகம், காரிய அனுகூலம். |
| விருச்சிகம் | பிரபுத்தனம், இஷ்டசித்தி, நன்கொடை, ஆரோக்கியம். |
| தனுசு | உத்தியோக பலிதம், ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், கட்டுப்பாடு. |
| மகரம் | பொருள் வியரம், அஜீரணக் கோளாறு, காரிய தாமதம், போசன சுகம். |
| கும்பம் | மனோதைரியம், கீர்த்தி, தேக நலன், காரிய சித்தி. |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், நல்ல செய்தி, போசன சுகம். |

- வளவன்



நேற்றுக்காலை கே.கே.எஸ்.வீதியில் பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவிலுக்கண்மையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் குண்டு பொருத்தி வைக்கப்பட்டிருந்த கடை....
(படங்கள்:- திலீவின்பன்

# மாகாண மட்ட விளையாட்டு போட்டிகள் நடைமுறைச் சாத்தியம் பற்றிய ஆலோசனை

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலையில் மாகாண மட்ட விளையாட்டுப்போட்டிகளை நடாத்துவது குறித்து வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் கே. டபிள்யூ விமலராஜன் யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமியைச் சந்தித்தார். இச்சந்திப்பு கடந்த 25 ஆம்திகதி காலை 10 மணிக்கு யாழ்மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றும் சகல வீரர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்ற மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியின் கோரிக்கைக்கமைய இப் போட்டிகளை காலந்தாழ்த்தி மாவட்ட விளையாட்டுப்போட்டிகளை நடாத்துவதற்கு உதவிப் பணிப்பாளர் ஒப்புதல் அளித்தார்.

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் ஆவணி மாதக் கடைசிப் பகுதியிலும் புரட்டாதி மாத ஆரம்பத்திலும் நடாத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் புரட்டாதி மாதக்கடைசி வாரப்பகுதியில் நடைபெறவுள்ள 32 ஆவது ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிக்கு முன்னர் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி நடத்த முடியாத சந்தர்ப்பத்தில் கடந்த வருட மாகாண மட்டப்போட்டிகளின் பெறுபேற்றை அடிப்படையாக வைத்து வடக்கு கிழக்கு மாகாண அணி தெரிவுசெய்யப்படுமென பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் உதைபந்தாட்ட அணி, வலைப்பந்தாட்ட அணி, மேசை வரிப்பந்தாட்ட அணி, பெண்களுக்கான கிரிக்கெற் அணி, பெண்களுக்கான கூடைப் பந்தாட்ட அணி ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளதாக பதில்மாவட்ட விளையாட்டு அதிகாரி பா. கிருபாகரன் தெரிவித்தார். (து-133)


*அன்பு வாசகர்களே!*

நல்லூர்க் கந்தனின் வருடாந்த
மஹோற்சவத்தை முன்னிட்டு
வலம்புரியில் இம்முறையும்
*"நல்லூர் கந்தன் பாமாலை"*
வெளிவரவுள்ளது. நல்லூரானைத் துதி செய்யும் உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி

நல்லூர்க் கந்தன் பாமாலை
வலம்புரி
இல.03 இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வுகாண பணிப்பு

(கொழும்பு)

மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படு வதாக அரசாங்கம் உறுதிமொழி அளித் துள்ளது.

நாட்டு மக்களின் உரிமைகளைப் பாது காக்க அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப் புடன் செயற்படுவதாக அரசாங்க ஊடகப் பேச்சாளர் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவத்துள்ளார்.

தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார் த்தைகளை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு அமைச்சரவைக்கு ஜனாதி பதி பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங் களை பின்னடையச் செய்து நாட்டு மக்க ளின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் தொழிற்சங்க நடவடிக் கைகளை கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற அமைச் சரவை தீர்மானங்களை வெளியிடுவதற் காக நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட் டின் போது அமைச்சர் அனுர பிரியதர் ஷன யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார். (அ-7)

# தீவக லயன்ஸ் கழகப் பணி

ஆடி அமாவாசையை முன்னிட்டு கீரி மலை நகுலேஸ்வரர் ஆலய தீர்த்த கரை யில் தீர்த்தமாடி தமது கடமைகளை நிறை வேற்றுவதற்காக வருகைதந்த ஆயிரக் கணக்கானோருக்கு நடப்பாண்டின் தீவக லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் கு.கங்கைவேணியனின் அனுசரணையு டன் தீவக லயன்ஸ் கழகம் பால் கோப் பியை வழங்கினர்.

இதில் கழக உறுப்பினர்களும் கலந்து சேவையாற்றினர். இதேவேளை வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்தில் வலுவிழந் தோர் 50 பேருக்கு உடுபுடவைகள் வழங் கியதுடன் நூறு பேருக்கு மேல் குறைகேள் சேவை நிகழ்வும் கடந்த சனிக்கிழமை சிறப் புற நடைபெற்றது. (அ)

# சாரதா சேவாச்சிரமத்தில் ஆத்மீக கலாசார மண்டபம்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் 50 இலட்சம் ரூபா செலவில் ஆத்மீக கலாசார மண்டப மொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இவ் அழகிய ஆத்மீக கலாசார மண்ட பத்தை றூபின் நிறுவனம் நிர்மாணித்து வருகின்றது.

இந்திய உயர்ஸ்தானிகர் திருமதி நிரு பமா மெனன்ராவ் இந்திய அரசாங்கத் தின் சார்பில் இவ் ஆத்மீக கலாசார மண்ட பத்திற்கான நிதி உதவியான 10இலட்சம் ரூபாவை சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தாவிடம் கையளித்திருந்தார். மிகுதிப் பணம் வெளிநாட்டிலும் உள்நாட்டி லும் உள்ள பக்த அடியார்களால் அன்பளிப் புச் செய்யப்பட்டிருக்கின்றது. (அ-52)

# அமைதி நோன்புப் பிரார்த்தனை

கியூடெக்- கரித்தாஸ் அனுசரணையுடன் அமைதிக்கான சர்வமத நோன்புப் பிரார் த்தனை யாழ்.மாவட்ட மக்கள் ஒன்று கூடி நாளை காலை 9.30 மணி முதல் 3.30 மணிவரை யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலு ள்ள யாழ்.சிங்கள மகாவித்தியாலய முன்ற லில் சர்வமத மக்களும் ஒன்றுகூடி பிரார்த் தனையில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கான முயற்சியினை சமயங்களுக் கிடையிலான ஒருமைப்பாட்டு அமையம் மேற்கொண்டுள்ளது.

இந்நிகழ்வு யாழ்.நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, இந்துமத குருபீடாதிபதி சிவப்பிரம்மஸ்ரீ ஐ.மகேஸ்வர சிவச்சாரியார், நாக விகாராதிபதி வணக் கத்துக்குரிய ஞானரத்னதேரர், காதி நீதிபதி உலக மாகாணசபைத் தலைவர் மௌலவி சுபியான் மற்றும் சைவக்குருமார் சம்மேளன பீடாதிபதி சிவஸ்ரீ சோ.தண்டபாணி தேசி கர் போன்ற மதப் பெரியார்களின் ஆசீரு டனும் அங்கீகாரத்துடனும் வழிகாட்டலி லும் சர்மதங்களின் அமைதி நோன்பு பிரார்த்தனை நிகழ்வு மக்கள் ஒன்றிணை ந்து இறைவேண்டுதலில் ஈடுபடவுள்ள னர். (அ)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களை சுவீகரிக்க அமைச்சரவை அனுமதி

எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பியதால் எரிபொருள் சேகரித்து வைப் பது அவசியமற்றதாகும் என பெற்றோலிய கூட்டுத்தாபனம் பொதுமக்களைக் கேட் டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாப னத்தில் தற்போது நிலவும் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கமைய பெற்றோலிய களஞ்சியத்திற்கு சொந்தமான 107 எரிபொருள் நிரப்பு நிலை யங்களை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சுவீ கரிப்பதற்குஅமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது.

அந்த நிறுவனத்தின் கீழ் வேலை செய்த 3500 ஊழியர்கள் கூட்டுத்தாபனத்தில் சேர்த்து கொள்ளப்பட்டனர்.

ஜாலிய மதகம தலைவர் பதவியில் இருந்து விலகியதிலிருந்து புதிய தலைவர் நியமிக்கப்பட்டதாக அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்தார். பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் அண்மையில் மேற்கொண்ட வேலைநிறுத்தம் அர்த்தம் அற்றது எனஅமைச்சர் குறிப்பிட்டார். (அ-7)

# பொருளாதார முன்னேற்றத்துக்கு சமாதானம் அவசியம்- பிரதமர்

(கொழும்பு)

சமாதானத்தை இனரீதியாக வேறுபடுத்த. முடியாதென்று பிரதமர் ரத்னசிறி விக் கிரமநாயக்க தெரிவித்துள்ளார். அரசாங் கம் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர் பில் அர்ப்பணிப்புடன் உள்ளதாக பிரத மர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற வைபவமொன்றில் உரையாற் றும் போதே இதனைக் குறிப்பிட்டார். பல் லின மதங்கள் சேர்ந்து வாழும் சமூகத் தில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண் டும் என்று பிரதமர் கூறினார்.

தமது இனம் மற்றும் சமயரீதியில் பொறுப்புடன் செயற்படுவதானது ஒற்று மைக்கு வழிவகுக்கும் என்று அவர் குறிப் பிட்டார். சமாதானம் என்பது பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்கு முக்கியமானது. சமாதானம் தொடர்பில் அரசாங்கம் அர்ப் பணிப்புடன் இருப்பதுடன் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை நோக்கி அர சாங்கம் நகர்வுகளை மேற்கொண்டுள்ள தாகவும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார். (அ-7)

# மந்தகதியில் வீதி புனரமைப்பு மக்கள் மத்தியில் விசனம்

வேலம்பிராய் அம்மன் கோயில் வீதி புனரமைப்பதற்கு கற்கள் பறிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் புனரமைக் கப்படாமல் காணப்படுகிறது. வேலம்பிராய் கிராமத்திற்குச் செல்லும் ஒரேயொரு வீதி இதுவாகும். இவ்வீதி மிகவும் குறுகிய வீதி யாதலால் பறிக்கப்பட்ட கற்கள் போக்கு வரத்துக்கு இடைஞ்சலான நிலையில் உள் ளது. வீதி புனரமைப்புக்கு பொறுப்பான வர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக் காதது அப்பகுதி மக்கள் மத்தியில் பலத்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-21)

## சீரற்ற பஸ் சேவை

இலங்கைப் போக்குவரத்துச் சபையி னால் நடாத்தப்படும் 769 இலக்க கைதடி வடக்கு பஸ்சேவை ஒழுங்காக நடைபெறு வதில்லையென அப்பகுதி மக்கள் தெரி விக்கின்றனர்.

மேற்படி இலக்க பஸ் சேவையானது ஒழுங்கின்றி இடம்பெறுவதாலும் நேரம் தவறிவருவதாலும் பாடசாலை மாணவர் கள் நேரத்துக்குப் பாடசாலை செல்ல முடி யாமல் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகிறார் கள்.

மேற்படி பஸ்சேவையானது கைதடி வடக்கு பிரதேசத்திற்கான ஒரேயொரு பஸ் சேவையாகையால் ஒழுங்கீனம் காரண மாக மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு பாடசாலை செல்ல முடியாதுள்ளது.

சிலவேளைகளில் பாடசாலை செல்லா மல் வீடு திரும்புவதாகவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். (து-21)

## நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொதுச்சுகாதாரப் பரிசோத கர் பிரிவில் கடந்த 24ஆம் திகதி ஆரம்ப மாகி நடைபெற்றுவரும் வளர்ப்பு நாய் களுக்கான விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றல் இம்மாதம் 31ஆம் திகதிவரை நடைபெறு மென கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரி சோதகர் க.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

28ஆம் திகதி இன்று வெள்ளிக்கிழமை பாலாவி, வாகையடி, வெள்ளாம்போக் கட்டி பகுதிகளிலும் 29ஆம் திகதி நாளை சனிக்கிழமை கச்சாய் வடக்கு, தவசிகுளம், கொடிகாமம் பகுதிகளிலும், 31ஆம் திகதி நாளை மறுதினம் திங்கட்கிழமை ஐயனார் கோவிலடி, கொடிகாமம், எருவன் பகுதி களிலும் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட வுள்ளன.

பொதுமக்கள் பொது சுகாதாரப் பரிசோத கருடன் தொடர்புகொண்டு வளர்ப்பு நாய்க ளுக்கு தவறாது ஊசியைப் போடும்படி மேலும் தெரிவித்துள்ளார். (து-29)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத் திலுள்ள யாழ்.வீதி ஞானக்குழந்தை இல் லம் பாலர் பாடசாலையின் 14ஆவது வரு டாந்த விளையாட்டு விழா நாளை சனிக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந் துக் கல்லூரி மைதானத்தில் பாடசாலை ஆசிரியை அகிலா சிவஞானம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் நவ நீதம் ஜெகதீசனும், சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக்கழக தலைவர் சிவநெறிக் கலாநிதி சைவப்புலவர் இராசையா ஸ்ரீதர னும், கௌரவ விருந்தினராக பாலர் கல்விக் கழகச் செயலாளர் தெ.இரத்தினகோபால் ஆகி யோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-7)

## கருத்துரைகள்

திருமறைக் கலாமன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சமகால தமிழக ஐரோப் பிய அரங்கப் போக்குகள் என்ற தலைப் பிலான நாடக அரங்கியல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் பி.ப 1.30 மணி வரை இல.128 டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைக் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'பிரயோக அரங்கு அறி முகமும் அனுபவமும்' என்ற தலைப்பில் திருமதி றஜித்தா சாம்பிரதீபனும், 'சமகால தமிழக அரங்குகள் அனுபவப் பகிர்வு' என்ற தலைப்பில் செல்வி வைதேகி வைகு ந்தநாதனும் 'ஐரோப்பிய புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலான அரங்கப் போக்கு கள்' என்ற தலைப்பில் ம.சாம்பிரதீபனும் கருத்துரையாற்றவுள்ளார்கள்.

க.பொ.த. உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்காக சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் அரங்கியல் துறை சார்ந்த மாணவர்கள், கலைஞர்கள், ஆர்வலர் கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு திருமறைக் கலாமன் றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

# கலாநிதி பாலசிங்கத்தின் கோரிக்கையில் இந்திய அரசு கவனம் செலுத்துகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசி யல்துறை ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வருத்தம் தெரிவித்து விடுத்த அறிக்கையை இந்தியஅரசு கவனத்தில் கொண்டுள் ளதாக இந்திய வெளியுறவு துறை இணை அமைச்சர் இ.அஹமது தெரிவித்துள்ளார். இந்திய நாடாளுமன்றில் நேற்று கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் இலங்கையில் அமைதி ஏற்படுத்துவதற்கான முயற்சியில் இந்தியா பங்கேற்க வேண் டும் என்று பாலசிங்கம் குறிப்பிட்டிருந்த தையும் இந்திய அரசு கவனத்தில் கொண் டுள்ளதாக தெரி வித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகள் இயக் கம் இந்தியாவில் தொடர்ந்தும் தடைசெய் யப்பட்ட இயக்கமாக இருந்து வருகிறது .பிரத மர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் புலிகளின் தலைவர்கள் பிரகடனப்படுத் தப்பட்ட குற்றவாளிகளாகவும் உள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-7)



லண்டனிலிருந்து வருகைதந்திருந்த எஸ்.தங்கவேல் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்கி உரையாற்று வதைப் படத்தில் காணலாம்.

(படம்: பரு.நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# இரண்டு மலைகள்

ஒரு பெரியவர் சொன்னார், "கடுகு அளவு நம்பிக்கை உன்னிடம் இருந்தால் போதும். ஒரு பெரிய மலையையே புரட்டிவிடலாம்" என்று.

"அது எப்படி முடியும்?" என்று நான்யோசிக்க ஆரம்பித்தேன். "நம்பிக்கையூட்ட வேண்டும் என்பதற்காகக் கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல்கிறீர்கள்" என்று நினைக்கிறேன் என்றேன்.

"அப்படி இல்லை... இந்தக் கதையைக் கேளு"... என்று ஆரம்பித்தார்... அது சீன தேசத்துக் கதையாம். (பல ஆண்டுகள் சீன அதிபராக இருந்த மாசேதுங் பொதுக் கூட்டங்களிலே மக்களுக்கு இந்தக் கதையைச் சொல்வது வழக்கமாம்.

அந்தத் தேசத்திலே ஷங்காய் மாநிலத்திலே ஒரு சின்னக் கிராமம். அந்தக் கிராமத்திலே ஒரு வயதான ஆள் இருந்தார். அவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் அவர் வீட்டு வாசலிலே முன்வழியை இரண்டு பெரிய மலைகள் அடைத்துக் கொண்டிருந்தன.

எப்படிப்பட்டாவது அந்த இரண்டு மலைகளையும் இடித்துத்தள்ளி... அதைத் தரைமட்டம் ஆக்கிவிட முடியும் என்பது அவருடைய நம்பிக்கை. உடனே செயலில் இறங்கினார். இரண்டு பிள்ளைகளையும் சேர்த்துக் கொண்டார். கடப்பாறைகளை எடுத்துக்கொண்டார் உடைக்க ஆரம்பித்தார்.

வயதான காலத்திலே...இப்படிப் பிள்ளைகளோடு உட்கார்ந்துகொண்டு அவர் மலையை உடைப்பதை அந்த வழியாலே போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லோரும் பார்த்தார்கள். அவர்களுக்குச் சிரிப்புத்தான் வந்தது! அந்தப் பெரியவருக்கு வேண்டிய ஒருவர் சொன்னார்.

"என்ன... நீங்கள் செய்யும் வேலையில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?" மலை எவ்வளவு பெரியது. அதை நீங்கள் மூன்று பேரும் சேர்ந்து உடைத்துத் தள்ளிவிட முடியுமா? பேசாமலம் இதை விட்டு விட்டு வேறு ஏதாவது உருப்படியான வேலை இருந்தால் அதைச் செய்யுங்கள்..." என்றார்.

அந்தப் பெரியவருக்கு ஆவேசம் வந்துவிட்டது. "என்ன சொல்கிறீர்கள்...? நாங்கள் மூன்று பேர்தானே இருக்கிறோம் என்பதால் தானே இப்படிச் சொல்கிறீர்கள்... அதனால் என்ன?...

நானும் என் பிள்ளைகளும் ஆரம்பித்த இந்த வேலையை முடிக்க முடியாமல் நான் இறந்துவிட்டால்...என் பிள்ளைகள் இதனைத் தொடர்ந்து செய்வர்ர்கள்.

இப்படி வாழையடி வாழையாக இந்த வேலை தொடரும்!... ஒருகட்டத்திலே இந்த இரண்டு மலைகளும் தரைமட்டமாகும். இப்போதைக்கு இது இரண்டு பெரிய மலைதான்... அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். இது ஒரு அங்குலம் கூட வளரப் போவதில்லை. ஆகையால் நாங்கள் உடைக்க உடைக்க அதுகுறைந்து கொண்டேதான் போகும்...

என்றைக்காவது ஒருநாள் என்னுடைய வாரிசுகள் இந்த மலைகளை இடித்துத் தரைமட்டமாக்கி விடுவார்கள்!... அந்த நம்பிக்கை எனக்கு உண்டு..."என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து மலையை உடைக்க ஆரப்பித்தார்.

இவருக்குப் போய் புத்தி சொல்ல ஆரம்பித்தோமே... என்று புலம்பிக் கொண்டே வந்தவர்கள் போய்விட்டார்கள்!

மலையை உடைக்கிற வேலை தொடர்ந்து நடந்தது. இரவு பகலாக நடந்தது... இவர்கள் படுகிறபாட்டைப் பார்த்துவிட்டு கடவுளே யோசிக்க ஆரம்பித்தார். இவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைத்தார்.

அவர்களுடைய உழைப்பையும் உழைப்பின் மேல் வைத்திருக்கிற நம்பிக்கையையும் இரண்டு தேவதைகள் ஆக்கினார். ஒருநாள் இரவோடிரவாக அந்த இரண்டு மலைகளையும் அகற்றும்படி அந்தத் தேவதைகளுக்கு உத்தரவிட்டார். மறுநாள் காலை... விடிந்ததும் எழுந்து பார்க்கிறார்கள்...மலை இருந்த இடமே தெரியவில்லை...ஒரே வெட்ட வெளியாக இருக்கிறது அந்த இடம். பெரியவரும் பிள்ளைகளும் மகிழ்ச்சியடைந்தார்களாம்!

இந்தக் கதைக்கு விளக்கம் என்ன? தெரியுமா உங்களுக்கு? அந்த இரண்டு மலைகளில் ஒன்று-வறுமை. மற்றது - பற்றாக்குறை. அந்த இரண்டு தேவதைகளும் யார் தெரியுமா? ஒன்று-உழைப்பு. இன்னொன்று-நம்பிக்கை.

கடவுள் யார் தெரியுமா? பொதுமக்கள். திறமை, வலிமை, பொறுமை- இவைதான் அந்தப் பெரியவரும் அவருடைய இரு பிள்ளைகளும்.

உறுதியோடும் தன்னம்பிக்கையோடும் செயற்பட்டால் எந்தவிதமான தடையையும் தகர்த்தெறியமுடியும் என்பது தான் அந்தக் கதையின் கருத்து. ஒரு ஆள் மது அருந்திவிட்டு...அதாவது தண்ணி போட்டுவிட்டு வருகிற வழியிலே... ஒரு பெரிய மலையிலே தலையை முட்டிக் கொடுத்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தான்.அந்த வழியாக வந்த மற்றொருவன் "ஏண்டா இப்படி நிற்கிறாய் ... பேசாமல் தலையை எடு. வீட்டிலே போய்படு" என்றான்.

அதற்கு அவன் "விபரம் தெரியாமல் பேசாதை... நான் தலையை எடுத்துவிட்டால் மலை சரிந்து விழுந்து விடுமே அதனாலே தான் நேற்று இராத்திரியிலிருந்து மலை சரிந்து விழுந்து விடாமல் முட்டுக்கொடுத்துக் கொண்டு நிற்கிறேன்" என்றானாம்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

# ஊழியர் பணிப்புறக்கணிப்பு முடிவுற்றாலும் கோரிக்கையை நிறைவேற்றுவதில் இழுபறி

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நிறைவடைந்த போதும் அரசாங்க தரப்பில் இதுதொடர்பில் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் பாரத லக்ஸ்மன் பிறேமச்சந்திர தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை அமைச்சர் எ.எச்.எம்.பௌசி ஆட்சேபித்துள்ளமையே இதற்கான காரணமாகும்.

பாரத லக்ஸ்மன் பிறேமச்சந்திர தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அந்தத் தொழிற்சங்கங்களின் கோரிக்கையை நிறைவேற்ற உறுதிவழங்கியுள்ளார்.

தொழிற்சங்கங்களின் கோரிக்கை அடிப்படையில் ஜனாதிபதியினால் பெற்றோலியக் கூட்டுத்தாபன களஞ்சியப் பிரிவுத் தலைவர் அஸந்த டிமெல்லை நீக்கி வருவதென்று அவர் உறுதியளித்துள்ளார்.

எனினும் பாரத லக்ஸ்மன் பிறேமச்சந்திர மேற்கொண்ட இந்த நடவடிக்கையை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அமைச்சர் பௌசி தெரித் துள்ளார்.

பாரத லக்ஸ்மனின் தந்தையாரே பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பை ஏற்பாடு செய்ததாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எரிசக்தி அமைச்சர் என்ற வகையில் தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்று பெற்றோலியக் கூட்டுத தாபன களஞ்சியத் தலைவரை பதவிவிலக்க முடியாது என்று கூறிய அவர் ஜனாதிபதியே அதனை தீர்மானிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலிய களஞ்சிய பிரிவுத் தலைவரான அஸந்த டிமெல் தமது பதவியை பிரச்சினையின்றி மேற்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு ஜனாதிபதி தம்மை பணித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாம் நியமித்த ஒருவரை பதவி விலக்குவதற்கு ஒருவருக்கும் அதிகாரம் இல்லையென்று ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே தாம் இந்த தொழிற்சங்க பிரச்சினையை ஜனாதிபதிகாரியாலய தரப்புஎன்றவகையிலேயே முடிவிற்கு கொண்டு வந்ததாக பாரத லக்ஸ்மன் பிறேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தம்மைப் பொறுத்தவரையில் பிரச்சினையை தீர்த்து எரிபொருள் விநியோகத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதே முக்கியமென்றும் பாரத லக்ஸ்மன் பிறேமச் சந்திர தெரிவித்துள்ளார். (அ-9)

## முன்னாள் வருமான வரி பிரதி ஆணையாளருக்கு வற்வரி பணமோசடி வழக்கில் பிணைமறுப்பு

(கொழும்பு)

357 கோடிக்கும் அதிகமான வற்வரி பணமோசடி சம்பந்தமான வழக்கில் மேலும் ஒரு சந்தேக நபருக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று சந்தேக நபர் ஆஜர்செய்யப்பட்ட போது சட்டமா அதிபர் தமது ஆட்சேபனையை தெரிவித்ததையடுத்தே பிணை மறுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற விசாரணையின் போது முதலாவது சந்தேக நபர் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு ஆஜர்செய்யப்படவில்லை.

சந்தேக நபர் வருமானவரித் திணைக்களத்தின் முன்னாள் பிரதி ஆணையாளராவார். சந்தேக நபரை வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள விசேட நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பாக முதலாவது இரண்டாவது சந்தேக நபர்களுக்கு ஏற்கனவே கொழும்புக்கோட்டை நீதவானால் பிணை மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினம் இடம்பெற்ற விசாரணையில் மூன்றாவது, நான்காவது மற்றும் ஏழாவது சந்தேக நபர்களுக்கும் பிணை மறுக்கப்பட்டது.

இதனடிப்படையில் சந்தேக நபர்கள் 7 பேரையும் அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ-9)

## சிறப்புச்சொற்பொழிவும் கூட்டுப்பிரார்த்தனையும்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இம்மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆவணி மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை வரை நாள்தோறும் மாலை 3 மணி தொடக்கம் 6.15மணிவரையும் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனையும் சிறப்புச் சொற்பொழிவும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வலிகாம அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடத்தப்படவுள்ளது. (து-133)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

தென்புலோலி உபய கதிர்காமத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி காலை 8மணிக்கு தேர்த் திருவிழாவும், 9ஆம் திகதி காலை 8மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (அ-35)

## முன்னாயத்த பயிற்சிப் பட்டறை

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குஉட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இவ் வருடம் நடைபெறவுள்ள கண்காட்சிக்கான முன்னாயத்தப் பயிற்சிப்பட்டறை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேலாயுதம் தலைமையில் கடந்த 22,23ஆம் திகதிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய சாவகச்சேரி பிரதேச இணைப்பாளர் திருமதி ச.சிவபாலன், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். (து-29)

## யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் அவர்களின் இடத்திற்கு திரும்பவேண்டும்

### அன்டோனியோ தெரிவிப்பு

யுத்த முன்னெடுப்புக்களால் மக்கள் சொந்த இடங்களுக்குத்திரும்புவது இன்றியமையாதது என ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலய ஆணையாளர் அன்டோனியோ குற்றாரஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளரிடம் கருத்துரைத்த போதே இவர் அதனைத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களின் நலன்களைப் பாதுகாப்பதில் சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதற்கு ஆதரவு வழங்குவதற்கும் ஐக்கிய நாடுகளுக்கான அதிகாரிகளின் உயர்ஸ்தானிகராலயம் ஆழ்ந்த அக்கறை கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வகையில் அகதிகள் சொந்த இடங்களுக்குத் திரும்பி நிம்மதியாக வாழவேண்டும் என்பதில் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஐக்கிய நாடுகள் சபைக்கான உயர்ஸ்தானிகராலயமும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளதாகவும் அன்டோனியோ குற்றாரஸ் தெரிவித்துள்ளார். (ச-5)

## உப ஆளுநர் பதவிக்கு முன்மொழிவு

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் 2006/2007ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம் கடந்த 23ஆம் திகதி இருபாலை 'எபனி' முகவர் தபால் நிலைய கட்டடத்தில் 'கருமதிருதி' லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராசாவின் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட இணைப்பாளர் கே.துரைராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இவ் விழாவில் 2008 ஆம் ஆண்டுக்கான உப ஆளுநர் பதவிக்கு கருமதிருதி லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராசாவை அபேட்சகராக நியமிக்க வேண்டுமென கோப்பாய் லயன்ஸ் கழக லயன் எம்.ஏ.சில்வஸ்ரர் (மாவட்ட இணைப்பாளர்) முன்மொழிய லயன் டாக்டர் வி.யோகேஸ்வரன் (பிரதி மாவட்ட கலினெற் செயலாளர் வடபகுதி) வழிமொழிந்தார்.

இவ் முன்மொழிவை விழாவில் கலந்துகொண்ட சகல லயன்ஸ் கழகக் கிளையினரும் ஏற்றுக்கொண்டு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். (அ)

## நூல்கள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு ஒரு தொகுதி ஆத்மீக நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

ஆச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா இந் நூல்களை கல்லூரி அதிபர் திருமதி எஸ். குட்டித்தம்பியிடம் கையளித்துள்ளார். (அ-52)

## மத்தியஸ்தர் தினவிழா

(மருதங்கேணி)


கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலக பிரிவின் மத்தியஸ்தர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தலைவர் க.நாகலிங்கம் (துவிசாளர் மத்தியஸ்த சபை) தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில், பிரதம விருந்தினராக கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ் வரன், சட்டத்தரணி சபா.ரவீந்திரன், வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை, செயலாளர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை வே.குலநாயகம், சட்டத்தரணி ஆ.க.நடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-35,101)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 37

முருக-தனுஷ்கோடி



*ஆகட்டும் பார்க்கலாம்!*

நான் எந்தச் சர்வகலாசாலையிலும் பயின்றதாகச் சொல்லவில்லை.

ஆனால், எனக்கு பூகோள சாஸ்திரம் நன்றாகத் தெரியும். தமிழ்நாட்டில் அநேகமாக எல்லாப் பகுதியும் எனக்குத் தெரியும். எங்கெல்லாம் நதிகள் இருக்கின்றன. எங்கெல்லாம். ஏரிகள் இருக்கின்றன என்பதெல்லாம் எனக்குத் தெரியும். எந்த நகரில் மக்கள் எம்மாதிரித் தொழில் செய்து பிழைக்கிறார்கள் என்பதும் தெரியும். இவையெல்லாம் பூகோள சாஸ்திரம் இல்லை என்றால் நேர் கோடுகளையும் வளைந்த கோடுகளையும் கொண்டிருக்கும் புத்தகங்கள் தான் பூகோள சாஸ்திரம் என்றால், அதுபற்றி நான் தெரிந்து கொள்ளாமலேயே இருந்துவிடுகிறேன் என்றார் காமராஜ். மக்களின் உள்ளத்தை மட்டுமன்றி, நாட்டின் எல்லா நடப்புக்களையும் அவர் அங்குலம் அங்குலமாக அறிந்து வைத்திருந்தார்.

ராமநாதபுரம் கிழக்குக் கடற்கரைப் பகுதி 1955ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பயங்கரப் புயலாலும், பேய் மழையாலும் பாதிக்கப்பட்டது. நிவாரணப் பணியில் ஈடுபட்டு மக்களைக் காப்பாற்ற காமராஜ் பரமக்குடிக்கு விரைந்து போனார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்னல் வேகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

இதனால் புயல் நிவாரண வேலை துரிதம் அடைந்தது. கொட்டும் மழையில் காமராஜ் மக்களைக் காப்பாற்றப் பம்பரமாய்ச் சுழன்றார். அந்தப் பகுதியில் ஒரு கால்வாயில் பாலம் ஒன்றை வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. அந்தக் கால்வாயைத் தாண்டினால் ராமநாதபுரம் போய்விடலாம். சாரக் கயிறு ஒன்றைப் பிடித்தார் காமராஜ். மார்பளவு தண்ணீரில் இறங்கி மறுகரை சென்றார். முதல் மந்திரியே மார்பளவு தண்ணீரில் இறங்கிக் கால்வாயைக் கடக்கிறாரே என எண்ணிய ரெவின்யூ போர்டு உறுப்பினர் ஒருவரும் தண்ணீரில் இறங்கினார். மறுநாள் காய்ச்சல் வந்து ரெவின்யூ போர்டு உறுப்பினர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஆனால் காமராஜ் அவர் பொழுது விடியு முன்னே பாதிக்கப்பட்ட வேறு இடங்களைப் பார்க்கச் சென்றுவிட்டார்.

ஒவ்வொரு தடவையும் அவர் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு வரும்போதும், பல புது திட்டங்களுடனேயே வருவார். அந்தத் திட்டங்கள் அனைத்தும் ஏழைகளுக்காகவே அமைந்திருக்கும். மாவட்ட கலெக்டர்களில் இருந்து, கடைநிலை ஊழியர்கள் வரை, அத்தனை பேர்களின் மனோ நிலையையும் அவர் அறிந்து வைத்திருந்தார்.

ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தினார். அவர்களின் பிள்ளைகள் இலவசக் கல்வி பெறுவதற்கு வசதி செய்தார். அரசாங்க ஊழியர்களின் பிள்ளைகளுக்குச் சம்பளச் சலுகை அளித்தார். நூறு ரூபாய் வருமானத்திற்குக் குறைந்தவர்களின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்பட்டது. உழவர் நில உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 30 ஏக்கருக்கு மேல் யாரும் நிலம் வைத்திருக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. உழவர்களை நிலச் சொந்தக்காரர்கள் மாற்றக் கூடாது என்று சட்டத்தின் மூலம் சமத்துவச் சமுதாயம் உருவாகியது.

மாநில அபிவிருத்திக் கமிட்டி ஒன்றைக் காமராஜ் நிறுவினார். இந்தக் கமிட்டியில் எல்லா மந்திரிகளும் தலைமைச் செயலகச் செயலாளர்களும் இருந்தனர். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தவும், புதிய திட்டங்களைப் பற்றி பரிசீலனை செய்யவும்த இந்தக் கமிட்டிக் கூட்டங்கள் பெரிதும் உதவின.

தட்சிணப் பிரதேச அமைப்பைக் காமராஜ் எதிர்த்தார். 1956இல் தற்காலப் புதிய தமிழகம் உருவானது. தாய்மொழி பற்றும், தாய்நாட்டுப் பற்றும் கொண்ட காமராஜ் மட்டும் முதல் மந்திரியாக வராவிட்டால், இன்றைய புதிய தமிழகம் உருவாகியே இருக்காது.

தமிழ்நாட்டின் எல்லா அரசியல் வேலைகளுக்கும் தமிழ்நாட்டில், தமிழ்மொழிதான் இருக்க வேண்டும் என்று காமராஜ் முடிவு செய்தார்.

ஆதரவற்ற முதியோருக்குப் பென்ஷன் கிடைக்க வசதி செய்தார். ஜாதி, மதம், கட்சி, நிறம், மொழி மாகாணம், அரசியல் வித்தியாசமின்றி எல்லா ஏழை மாணவர்களும் கல்வி வசதிபெறச் சலுகைகள் அளித்தார். நண்பகலில் இலவச உணவு அளிப்புத் திட்டம் காமராஜ் ஆட்சியில்தான் துவக்கப்பட்டது.

சென்னை, தியாகராய நகர், திருமலைப் பிள்ளைரோட்டில் உள்ள 8 ஆம் எண் இலக்கத்தில் காமராஜ் 1948ஆம் ஆண்டில் குடியேறினார். அவர் முதல் மந்திரியாய் இருக்கும்போது காவல் இருந்தாலும், பொலிஸ் பந்தாக்கள் இருந்ததில்லை. ஐம்பது பேர்களுக்குக் குறையாமல் தினமும் பேட்டியளித்தார். இந்த எண்ணிக்கை நூறிலிருந்து இருநூறு வரை உயர்ந்ததும் உண்டு.

உதவி கேட்டு வரும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மகனுக்கு வைத்தியக் கல்லூரி, எஞ்ஜினியரிங் கல்லூரி "அட்மிஷன்" சிபாரிசுக்கு வருபவர்கள், உள்ளூர் அதிகாரிகளைப் பற்றிக் குறை கூறி வருவோர், வரப்போகும் தேர்தலுக்கு டிக்கெட்டு கேட்டு வருபவர். மாநாட்டைத் துவக்கவேண்டும் என்று வருபவர், புது கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கு அழைக்க வருபவர், இப்படி பலதரப்பட்டவர்களுக்கு நாள்தோறும் அவர் பேட்டியளித்தார்.

இத்தனை பேருக்கும் "ஆகட்டும் பார்க்கலாம்" என்ற பதில் காமராஜிடமிருந்து கிடைக்கும். நடப்புக்குச் சரிப்பட்டு வராத காரியங்களுக்காக வருபவர்களிடம் "அது முறை இல்லை" என்று மட்டும் சொல்லி அதற்கு மேல்பேசமாட்டார். நடைமுறைக்கு ஏற்காத காரியங்களுக்குச் சிபாரிசு வேண்டி வருபவர்கள் உயிர் நண்பர்களாய் இருந்தாலும், "இல்லை போ" என்றுநேருக்குநேர் கூறிவிடுவார்.

நாட்டு விடுதலைக்காகப் போராடியவர்களையும், காங்கிரஸ் தொண்டர்களையும், அவர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் விசாரித்தார். பல இடங்களில் எவ்வளவுதான் கூட்டம் இருந்தாலும், கூட்டத்தில் ஒதுக்கி நிற்கும் தமது சகாவைப் பெயர் சொல்லி அருகில் அழைத்துக் கௌரவித்தார்.

*அழகும் உணவும்*


ஒருமுறை மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு சென்னைத் துறைமுகத்தை விஸ்தரிக்கும் திட்டம் பற்றிக் கடிதம் எழுதியது. கோட்டைக்கு எதிரே துறைமுக விஸ்தரிப்புச் செய்தால் சென்னையில் அழகு கெட்டுவிடும். ஆகவே ராயபுரம் பகுதியில் விஸ்தரிக்கலாம் என முதல் மந்திரி சிபாரிசு செய்தார். உடனே மத்திய அரசு மீண்டும் தமிழ்நாடு அரசுக்கு எழுதியது. "பாறைகள் நிறைந்துள்ள பகுதியில் விஸ்தரிப்புச் செய்ய இயலாது. ஆகவே உங்களுக்கு வேண்டியது உணவா? அழகா?" (Do you want bread or beauty?) என்று மத்திய அரசு எழுதிக்கேட்டது. உடனே காமராஜ் "எனக்கு அழகை விட உணவுதான் தேவை" (I want bread rather than beauty) என்று எழுதினார். காமராஜ் அன்று அவ்வாறு எழுதியதன் பயன்தான் விஸ்தரிக்கப்பட்ட துறைமுகத்தை இன்று காணமுடிகிறது.

(தொடரும்)









நேற்று முன்தினம் யாழ். கல்வியியற் கல்லூரியால் "கல்விப் புலரி" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் ஜெயராசா, மனைவியார் சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதையும், திருமதி சபா ஜெயராசா மங்களவிளக்கேற்றுவதையும், அன்னாருக்கு கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி ரி.கமலநாதன் பட்டம் வழங்கிக் கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-திலீவின்பன்)

## பேராசிரியர் சபா ஜெயராசாவுக்கு "கல்விப் புலரி" பட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மண்ணில் கல்விப் பணியாற்றி ஆசிரியர் பரம்பரையொன்றை உருவாக்கியதுடன் கல்வியியல் சம்பந்தமாகப் பயன் தரு நூல்கள் பலவற்றைப் படைத்தளித்த பேராசிரியர் சபா ஜெயராசாவுக்கு யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி "கல்விப் புலரி" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 3மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு முகிழ்நிலை ஆசிரியர்எஸ்.கஜேந்திரன் தலைமை வகித்தார். விழாவின் ஆரம்பத்தில் விழாநாயகர் பேராசிரியர் சபா ஜெயராசாவும் திருமதி ஜெயராசாவும் கல்லூரி ஆலயத்திலிருந்து ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள்.

மங்களவிளக்கை திருமதி சபா ஜெயராசா ஏற்றிவைக்க, கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி ரி. கமலாநாதன், மேலதிக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், உபபீடாதிபதி பா.தனபாலன் மற்றும் கல்வியியலாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதி ஆகியோர் விழா நாயகருக்கு பொன்னாடையும் மலர்மாலையும் அணிவித்துக் கௌரவித்ததுடன் பாராட்டுரைகளும் நிகழ்த்தினர்.

முகிழ்நிலை ஆசிரியர்களால் வாழ்த்துப் பா இசைக்கப்பட்டதையடுத்து முகிழ்நிலை ஆசிரியர் வை.லோகதக்ஷா நன்றியுரை நவின்றார். (து-133)

## சமுர்த்தி திட்டத்துக்கு ஆலோசனை

சமுர்த்தித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஆலோசனைகளை வழங்குவதற்கு சர்வதேச நிதிச்சபை முன் வந்துள்ளது.

அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் சர்வதேச நிதிச்சபையின் ஆலோசகருக்குமிடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி வங்கியின் செயற்திட்டத்தின் கீழ் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (அ)

## மோட்டார் சாரதி அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தினமும் 30முதல் 40 வரையானவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுகின்றனர் என்று பரீட்சகர் கோ.மதி வண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தான் பதவியை பொறுப்பேற்றுக் கொண்ட போது 3ஆயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் இருந்தன என்றும் தற்போது இவை அனைத்தும் பரீட்சிக்கப்பட்டு விட்டன என்றும்,


தினமும் வருகின்ற விண்ணப்பங்களே தற்போது செயலகத்தில் உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-122)

# சுவாமி விவேகானந்தர்

## அத்தியாயம் - 14

### ஞானப் பட்டறையிலே

இரண்டாம் முறை சென்றபோது பரமஹம்சர் விரும்பியபடித் தனியாகவே சென்றான் நரேந்திரன். வண்டியில் சென்ற அவனுக்குக் கல்கத்தாவிலிருந்து தட்சிணேசுவரம் இவ்வளவு தொல்லவா என்று



ஆச்சரியமாக இருந்தது. சாலை முடிகிற வழியாகவே இல்லை என்று அவன் சலிப்புற்றபோது சாதுக்கள் சங்கம் சத்தியப் பாதையில் சாவடியாக நிற்கும் என்று பாடியதற்கேற்ப தோட்டமும் துரவும் சூழ்ந்த தட்சிணேசுவர ஆலயமும் வந்து சேர்ந்தது.

நேராக ஸ்ரீராமகிருஷ்ணரின் அறைக்குச் சென்றான் நரேந்திரன். தாம் சயனிக்கும் மெத்தையை அடுத்துப் போடப்பட்ட சிறிய மெத்தையில் அவர் அமர்ந்திருந்தார். எப்போதும் அதில் அமருவது தான் அவரது வழக்கம். நரேந்திரனைக் கண்டவுடன் அவனை அன்பு மிக அழைத்து அவர் தமக்கு அருகிலேயே மெத்தையில் அமரச்செய்தார். அடுத்தகணமே அவரது உணர்வுகள் ஓங்கி எழுந்தன. நரேந்திரன் மீது பதிந்த நோக்குடன், எதையோ முணுமுணுத்தவாறு அவனை நெருங்கினார் அவர். முன் சந்திப்பின்போது செய்த மாதிரியே அவர் விசித்திரமாக ஏதோ செய்யப் போகிறார் என்றுஎண்ணலானான் நரேன். ஆனால் அவரோ முன் சந்திப்பு மாதிரி விசித்திரம் நிகழ்த்த வில்லை. அதைவிட அதி விசித்திரத்தை இம்முறை நிகழ்த்தினார். தமது வலது பாதத்தை நரேந்திரனின் உடலில் பதித்தார்.

பொருட் செல்வத்தை நாடாகவும், மனையாகவும், பணமாகவும், பூமியாகவும் பல விதங்களில் வழங்குவது போல பரமஞானச் செல்வத்தையும் பல விதங்களில் வழங்க முடியும். அருள் வாக்கால் வழங்கலாம்; திருநோக்கால் வழங்கலாம். ஸ்பரிசத்தால் வழங்கலாம் இவற்றில் திருவடி தீக்ஷை என்பது மிக மிகப் பவித்திர மானதாகும்.

உடனே ஒரு மகத்தான விந்தை நிகழ்ந்தது. நரேந்திரனுடைய உள்ளத்தில் ஒரு கிளு கிளுப்பு, ஒரு குது குதுப்பு ஏற்பட்டது. கண் முன் தெரிந்த சுவர்களும், அந்தச் சுவர்களுக்கு உட்பட்டிருந்த சகல மான பொருட்களும் சுழன்று சுழன்று சூனியமாகக் கரைந்தன. சுவர்களுக்கு அப்பாற்பட்ட தோட்டம் துரவும், கங்கையும், அந்த கங்கையைத் தொடும் வானும் எல்லாமே சுழன்று சுழன்று சூனியமாகக் கரைந்தன. ஆகா, அவைகளுடன் நரேந்திரனுமே அந்த மகா சூனியத்தில் கரையத் தொடங்கினான்.

முடியாது, கரைய முடியாது; கூடாது, கரையக்கூடாது என்று அவன் உள்ளம் அலறியது. பயப்பிராந்தி அடைந்த நரேந்திரன், "ஐயா, என்னை என்ன செய்கிறீர்கள், எனக்கு வீடு வாசல் உண்டு. பெற்றோரும் உற்றாரும் உண்டு" என்று கூவினான்.

பரமஹம்சர் பேரன்பு பொங்க சிரித்தார். அவனது மார்பைத் தட்டிக் கொடுத்தபடி 'சரி, இது முடிந்து போகட்டும், உரிய காலத்தில் தானே எல்லாம் நடக்கும்' என்றார். அதென்ன மாந்திரீக சத்தியா? துவர் அவ்வாறு கூறியதுதான் தாமதம், நரேந்திரனின் அதிசயமான அனுபவம் அப்படியே மாய்ந்து விட்டது. நரேந்திரன் நரேந்திரனானான். அந்தச் சுவர்களும் அவற்றுக்கு உட்பட்டிருந்த சகலமாக பொருட்களும் அவை அவை ஆயின. அந்தச் சுவர்களுக்கு அப்பாற்பட்ட தோப்பும் துரவும், கங்கையும்; கங்கையைத் தொடும் வானமும் தாமாயின.

இந்தச் சம்பவத்தைப் பிற்காலத்தில் விவரித்த விவேகானந்தர் கூறுவார். நான் இந்த நிகழ்ச்சியை விவரிப்பதற்கு எவ்வளவு நேரம் ஆயிற்றோ அதற்குள்ளாகவே இத்தனையும் நடந்தேறிவிட்டது. அவ்வளவு குறுகிய காலத்தில் நடைபெற்றாலும் அது என் அறிவை ஒரு புரட்டு புரட்டி விட்டது. இதற் கென்ன அர்த்தம் என்று நான் ஆச் சரியத்துடன் எண்ணலானேன். இத்தனை அற்புதமும் இந்த மனிதர் நினைத்த மாத்திரத்தில் நிகழ்கிறது. இவர் நினைத்த மாத்திரத்தில் மறைகிறதே அதெப்படி? மெஸ்மரிஸம் என்றும் ஹிப்நாடிஸம் என்றும் சொல்லப்படும் மாயா ஜால வசீகரணத்தை சேர்ந்த துதானா இது? என்று நான் என்னையே கேட்டுக் கொண்டேன். இருக்க முடியாது இந்த ஜால வித்தைகள் எல்லாம் பலவீனமான மனதுள்ள வர்களைத் தான் மயக்கும். நானோ இதற்கு நேர்மாறான மனப்போக் குள்ளவன் என்று பெருமைப்படுபவன் அல்லவா? அப்படியொன்றும் நான் ஸ்ரீராமகி ருஷ்ணர் என்ற அம்மனிதர் என்னைவிட சக்தி பொருந்தியவர் என்று எண்ணி அவரிடம் அதுவரை சரண்புகுந்துவிடவும் இல்லை. ஒன்றையே நினைத்து அதிலேயே பித்தேறிய வர் அவர் என்றுதான் நினைத்திருக்கிறேன். இவ்வாறிருக்கும் நான் திடீரென இத்தகைய மாறுபட்ட அனுபவத்துக்கு ஆளானேன் என்றால் அதற்குக் காரணம் என்ன? என்னால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. 'இது ஏதோ ஒரு புதிர்; இதை நான் அவிழ்க்க முயலாதிருப்பதே சிலாக்கியம்' என்று எண்ணி னேன். எனினும் நான் என்னை நன்கு கண்காணித்துக் கொள்ள வேண்டும்; மீண்டும் அம் மனிதர் தம் சக்தியை என்மீது பிர யோகிக்க இடமளிக்கக்கூடாது என்று உறுதி பூண்டேன்.

மறு கணமே வேறு சிந் தனை பிறந்தது. சங்கற்ப உறுதியும், வலிமையும் பொருந்திய என்னைப் போன்ற ஒருவனின் மனதைத் தூளாகச் சிதற அடித்த இம் மனிதரை வெறும் பித்தர் என்று எப்படி ஒதுக்குவது? என்றாலும் அவர் எங்களது முதல் சந்திப் பின் போது உணர்ச்சிமயமாகப் பொங்கியதை எண்ணினால் யாருமே அப்படித் தான் முடிவு கட்டுவார்கள். இல்லாவிடில் (காரிய காரணங்களால் அலசிப்பார்க்க முடியாத செயல்களைப் புரியும்) ஆண்டவனின் அவதாரமாக அவர் இருக்க வேண்டும் நிச்சயமாக அப்படியிருக்க முடியாது (என்றே அந்த நாட்களில் நான் கருதினேன்) எனவே என்னுடைய அதிசய அனுபவம், குழந்தையின் தூய்மையும் எளிமையும் ஸ்வச்ச மாகக்கூடிய அந்த அசாதாரண மனிதர் இரண்டின் உண்மையான இயல்பையும் அறியமாட்டாமல் குழம்பினேன். விஷயங்களின் யதார்த்த நிலையை மதிப்பிடுவதில் நான் அடைந்த தோல்வியில் என்னுடைய பகுத்தறிவு மனப்போக்குச்செம்மையான அடி விழுந்தது.'

நரேந்திரன் இப்படியெல்லாம் மன உளைச்சலுக்கு ஆளான போதும் ஸ்ரீராமகிருஷ்ணரோ சர்வ சகஜமாகவே அவனுடன் பழகத் தொடங்கினார். அன்புடன் முதல் முறை செய்தது போலவே உபசரணைகள் புரிந்தார். நரேந்திரனிடம் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் அவர் காட்டிய அக்கறை அவன் நெஞ்சை அள்ளியது. அவர் பால் அவன் இழுக்கப்பட்டான். பகல் பொழுது முடிந்து மாலை வேளை தொடங்கியது. வீடு திரும்ப விடை கேட்டான் நரேந்திரன்.

ஸ்ரீராம கிரு ஷ்ணர் முகத்தில் உடனே துயர ரேகைகள் படர்ந்தன. தனக்குச் சௌகரியப்படும் அளவுக்கு எவ்வ ளவு விரைவில் மீண்டும் தட்சினே சுவரம் வரமுடியுமோ அவ்வளவு விரைவில் வருவதாக நரேந்திரன் வாக்களித்த பின்னரே அவர் பிரியாவிடை கொடுத்தார்.

சில நாட்கள் சென்றன.

மூன்றாம் முறையாக தட்சிணேசுவரத்துக்கு வந்தான் நரேந்திரநாதன்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் மகத்தான சக்திக்கும் தான் ஆட்படலாகாது என்று அவன் எவ்வளவோ காபந்துஸ செய்து கொண்டும் அவரிடம் அது பலிக்கவில்லை. சமுத்திரத்தைப் பேரலைகள் வீசாதிருக்குமாறு யார் கட்டளை பிறப்பிக்க முடியும்? அருட்கடலை அலை எறியாதிருக்குமாறு யார் கட்டுப்படுத்த முடியும்? அல்லது தான் அந்த அலையில் அகப்பட முடியாது என்று கடலில் விழுந்த ஒரு துரும்பினால் எதிர்க்கத்தான் முடியுமா?

நரேந்திரன் மூன்றாவது முறை வந்த போது ஸ்ரீராம கிருஷ்ண தேவர் அடுத்திருந்த யதுநாத் மல்லிக் என்பவரின் தோட்டத்துக்கு அவனை அழைத்துச் சென்றார். இருவரும் தோட்டத்தில் உலவினர். பிறகு அங்கிருந்த ஒரு மண்டபத்தில் அமர்ந்தனர் சமயம் வந்து விட்டது!

தான் தேடிக்கொண்டிருந்தவன் இந்த நரேந்திரன் தான் என்று ஸ்ரீராமகி ருஷ்ணர் ஜயந்திரிபற அறிந்து கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது. நரேந்திரனை அவர் யார் என்று கருதியிருந்தாரோ அது முற்றிலும் உண்மை என்று நரேந்திரன் வாய் மொழியாகவே அறிந்துகொள்ள வேண்டிய காலம் நேர்ந்துவிட்டது.

நரேந்திரன் உண்மையில் யார்? நரேந்திரனை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் யாரென எண்ணினார்? முன்பு ஒரு முறை தமக்குச் சமாதி நிலை கூடிய போது...

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் எங்கோ உயர உயர, இன்னும் உயர உயர அப்பாலும் உய்ர அதற்கும் உயரச் சென்று கொண்டிருந்தார். பூமண்டலமும், மேக மண்டல மும், வாயு மண்டலமும் பின்னால் பின்னால் தோய்ந்து போயின. மேலும் மேலும் சென்று கொண்டே யிருந்தார் முனிவர். சந்திர மண்டலத்தையும் கடந்தாயிற்று. சூரியனும் இதோ எங்கோ அடியில் போய்க் கொண்டே இருக்கிறான். தாரகைக் கணங்கள் பின் தங்கிப் புள்ளி புள்ளியாகி, அடியோடு மறைகின் றன. தவயோகி மட்டும் இன்னமும் உயர

**ஆன்மீகப் பாதை**
**ரா. கணபதி**

உயரச் சென்று கொண்டேயிருக்கிறார்.

அதற்கும் மேலாக ஓர் அதிசய நிலை, பொருள்கள்யாவும் எண்ணமாக ஓடியதைப் போல, எண்ணங்களெல்லாம் பொருள்களாக உருவத்துடன் கூடி நிற்கும் உலகங்களின் மேலாக ஸ்ரீராமகிருஷ்ண தேவர் சென்றுகொண்டிருந்தார். அன்பு, அழகு, அறிவு இந்தத்தத்துவங்களின் உருவங்களையெல்லாம் தேவ தேவியாராகக் கண்டார் அவர் அதையும்விட சூட்சுமமான பிரதேசங்களில் அவரது பயணம் தொடர்ந்தது. எண்ணம், பொருள் என்றஎல்லா மாயத்தோற்றங்களையும் பரம்பொருளிடமி ருந்து பிரிக்கும் எல்லைக்கோட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார் குரு மகராஜ் என்ன ஆச்சரியம்! இனிஒன்றேயானமெய்ப் பொருளைத் தவிர வேறெதும் கிடையாது என்று அவர் எண்ணிய அந்தப் பரமானந்த வெளியிலே ஏழு முனிவர்கள் தெய்விகமான குளிர்ந்த ஒளி வீசிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

## முகமாலையில் பல்கலை மாணவர் விபரம் பதிவு
## பல்கலைக்கழக சமூகம் கவலை தெரிவிப்பு

யாழ்.முகமாலை சோதனைச் சாவடி ஊடாகப் பயணிக்கும் பல்கலைக் கழக மாணவர்களின் விபரங்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பதிவுசெய்து வருகின்றனர். தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த யாழ்.பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் 25 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளன.

இதனால் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டுக்காக யாழ்ப்பாணம் நோக்கி முகமாலைச் சோதனைச் சாவடியூடாக வருகின்றபோது அவர்களிடம் கல்விகற்கும் ஆண்டு. கற்கும் பீடம் மற்றும் தங்குமிடம் போன்ற விபரங்களை பதிவு செய்து வருகின்றனர்.

இத்தகைய செயற்பாடு மாணவர் மத்தியில் பெரும் பதற்றத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது. குடாநாட்டில் தற்போது நிலவி வரும் வன்முறைச் சூழல் காரணமாக பெருமளவான மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழ கத்திற்கு வருகை தராத நிலையில் பண்டயினரால் மேற்கொள்ளப் படும். இத்தகைய செயற்பாட்டால் மாணவர்களின் வரவும் வீழ்ச்சி நிலையும் காணப்படுவதாக பல்கலைக்கழக சமூகம் தெரிவிக்கின்றது. (அ)

## சரத் பொன்சேகா பொறுப்பேற்றார்

இராணுவத் தளபதி பொறுப்பை மீண்டும் சரத் பொன்சேகா ஏற்றுள்ளார் கொழும்பு இராணுவத் தலையமையகத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் சிங்கப்பூரில் சிகிச்சை பெற்ற பின்னர் கடந்த திங்கட்கிழமை கொழும்பு திரும்பிய சரத் பொன்சேகா மீண்டும் இராணுவத் தளபதி பொறுப்பை ஏற்றுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா மீது கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது. சரத் பொன்சேகா செயலிழந்த நிலையில் நந்தா மல்லவ ராச்சியை பதில் இரா ணுவத் தளபதியாக மஹறந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார். இந்நிலையில் மீண்டும் சரத் பொன்சேகா பொறுப் பேற்றிருக்கிறார். (அ)

## நாலாம் கட்டப் போருக்கு தலைவரின் கட்டளைக்குக் காத்திருக்கும் தளபதிகள்

எமது இறுதிவிடுதலையை வென்றெடுப்பதற்கான நாலாம் கட்டப் போரை தொடங்குவதற்கு தேசி யத் தலைவர் உத்தரவுக்காக தள பதிகள் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு மாவடி முன் மாரிக் கோட்ட தளபதி பாஸ்கரன் தெரிவித்தார்.

லெப். கேணல் நிசாம் பயிற்சி பாசறையில் 6ஆவது அணியினருக்கான கிராமியப்படை பயிற்சியின் தொடக்க நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இனி ஒரு யுத்தம் வருமானால் சிங்கள இராணுவம் படுகொலைகளை மிக மோசமான முறையில் கட்டவிழ்த்துவிடும். இதில் புலிகள் வேறு மக்கள் வேறு என்று வேறுபாடு காட்டமாட்டார்கள். எனவே, ஒவ்வொருவரும் ஆயுத அறிவு பெற்றிருப்பதன் மூலம் எம்மை தற்காத்துக்கொள்ள முடியும். இதேவேளை தமிழ்மக்களின் இறுதிவிடுதலையை அடைவதற்கு தமிழர் தாயகம் தயாராகிக் கொண்டிருக்கின்றது.

தமிழர் தாயகத்தில் தளபதிகள் சண்டையை தொடங்குவதற்கான தயார் நிலையில் உள்ளார்கள். தேசியத் தலைவரின் உத்தரவுக்காக காத்துக்கொண்டிருக்கின்றனர். எமது இறுதி விடுதலையை வென்றெடுக்கும் இந்த நான்காம் கட்ட ஈழப்போரில் மக்களாகிய நீங்கள் போராளிகளுக்கு பின்புலமாக நின்று விடுதலையை வென்றெடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அது மாத்திரமன்றி இங்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகளை அவதானத்துடனும் பொறுப்புடனும் பெற்று எதிர்காலத் தில் தாயக விடுதலைக்கு பங்களிப்பை வழங்க வேண்டும் எனக் குறிப் பிட்டார். (அ)

## கறுப்பு யூலை நாள் நினைவாக நோர்வேயில் கவனயீர்ப்பு நிகழ்வு

1983இல் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள பேரினவாத அரசு கட்டவிழ்த்துவிட்ட இனப்படுகொலையின் நினைவாக நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 1 மணி முதல் மாலை 4 மணிவரை நோர்வேயின் பிரதான நகரங்களில் கவனயீர்ப்பு நிகழ்வு ள் நடத்தப்பட்டன.

ஒஸ்லோ ,பாகன், துறொண்ட, ஹைறம் மற்றும் ஸ்ரவாங்கர் ஆகிய நான்கு நகரங்களிலும் அதிக மக்கள் நடமாட்டமுள்ள இடங்களில் சிறப்பு மையங்கள் அமைக்கப் பட்டு ஒளிப்படக்கண் காட்சி அமைக்கப்பட்டது.

1983 யூலையில் அரசாங்கத்தின் வழிநடத்தலில் இனவெறிக் காடையர்களும் இராணுவமும் பொலிஸாரும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை உயிருடன் தீயிலிட்டும், வெட்டியும், சுட்டும் படுகொலை செய்த கோரத்தின் நினைவாக சிங்கள அரச பயங்கரவாதத்தின் உண்மை முகத்தையும் தமிழ் மக்களின் அவலங்களையும் நோர்வேஜிய மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் கவனயீர்ப்பு நிகழ்வு அமைந்தது. (ச-5)

நுணலும் (தவளை) தன்வாயால் கெடும்.

-தமிழ்ப் பழமொழி

வலம்புரி

## பேராசிரியர் நளின் டி சில்வாவிற்கு ஓர் அன்பு மடல்

அன்பார்ந்த பேராசிரியர் நளின் டி சில்வாவிற்கு அநேக வணக்கம்.

நீண்டகாலமாக தங்களுக்கு கடிதம் எழுதவேண்டுமென அவாவிருந்தும் கால சூழ்நிலை இடம் தரவில்லை.

தற்போது தாங்கள் ஆற்றிய உரையை வாசிக்க முடிந்தது. தமிழர்களுக்கு தனியான கலை, கலாசாரம் இல்லை என்று கூறியிருக்கிறீர்கள்.

இதைப்பார்த்து அழுவதா? சிரிப்பா? என்று தெரியாமல் உள்ளது.

ஒரு பேராசிரியர் இவ்விதம் கூறியமை பெரும் வேதனைக்குரியது. இலங்கை வரைபடத்தில் யாழ்ப்பாணத்தை குறித்துக்காட்டுமாறு ஒரு மாணவனிடம் கேள்வி எழுப்பினால் அதை மாணவன் தனக்கு யாழ்ப்பாணம் தெரியவில்லையாயின் அதைப் பேசாதுவிடுவதே புத்திசாலித்தனம்.

அதை விடுத்து யாழ்ப்பாணத்தை கொழும்பின் பகுதியில் குறிப்பிட்டால் பிரஸ்தாப மாணவனுக்கு யாழ்ப்பாணம் மட்டுமல்ல கொழும்பும் தெரியாது என்பதை அவனாகவே காட்டி விடுகின்றான்.

இது அந்த மாணவனின் முட்டாள்தனத்தையே காட்டி நிற்கின்றது. அந்த முட்டாள் தனத்தையே தங்களின் உரையும் காட்டி நிற்கின்றது.

தமிழர்களுக்கு தனியான கலை, கலாசாரம் இல்லையென்பது பற்றி தாங்கள் கூறுவதற்கு முன்னதாகவே தமிழர்களின் தொல்லியல் சான்றுகளை அவர்களின் வாழ்வியல் வடிவங்களை ஆராய்ந்திருக்கவேண்டும்.

இதை விடுத்து தமிழர்களுக்கு எதிராகச் சொல்லவேண்டுமென்பதற்காக அவர்களுக்கு தனியான கலை, கலாசாரம் இல்லையெனக்கூறுவது ஒரு பேராசிரியருக்கு அழகல்ல.

ஓர் இனத்தின் தொல்லியல் வரலாறு தெரியவில்லையாயின் பேசாதிருப்பதே அறிவோர்க்கழகு.

பேராசிரியர் என்ற பதம் உயர்வுடையதாயினும் அது சிலருக்கு விபத்தாக கிடைத்து விட்டது என்ற கருத்திற்கு தாங்களும் ஒரு காரணமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

சிங்கள மக்களில் புத்திஜீவிகள் வரிசையில் இருக்கக்கூடிய தாங்கள் பொறுப்பற்ற முறையில் கதைத்திருப்பது இந்த நாட்டில் மீண்டுமோர் யுத்தம் வெடிப்பதற்கு வழிவகுக்கும்.

செம்மொழியாக பிரகடனப்படுத்தப்பட்ட தமிழின் பெருமை அறியாத தாங்கள், தமிழர்களுக்கு தனியான கலை, கலாசாரம் இல்லையென கூறியதில் இருந்து தங்களின் சிறுமைத்தனத்தையும் கயமைத்தனத்தையும் வெளிப்படுத்தி விட்டீர்கள் பரவாயில்லை.

ஆனால் ஒரு விடயத்தை மட்டும் இன்று உறுதியாகக்கூறுகின்றேன். அதாவது, தங்களைப்போன்ற புத்திஜீவிகள் பேரினவாத சிந்தையில் மூழ்கியிருப்பதனாலேயே மனித உயிர்கள் நாளுக்கு நாள் அழிகின்றன.

இதன் முடிவு முழு நாட்டிற்குமே அழிவைத்தருமே தவிர, அது எந்த வகையிலும் இந்த நாட்டை காப்பாற்ற மாட்டாது.

# வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க முடிவு

## அங்கவீனர்களுக்கும் கொடுப்பனவு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவை ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதென தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும் போது அரசாங்க ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் இதற்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அங்கவீனமுற்றவர்கள் இருக்கின்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபாவை கொடுப்பனவாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைக்கு சமர்ப்பித்த இந்த ஆலோசனைக்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

இலங்கையில் அங்கவீனமுற்றவர்கள் உள்ள குடும்பங்கள் சுமார் 5 ஆயிரம் வரையுள்ளனர். இதற்காக அரசாங்கம் திறைசேரியில் இருந்து 45 மில்லியனை ஒதுக்கவுள்ளது. இக் கொடுப்பனவுகள் யாவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நல அமைச்சின் ஊடாக வழங்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## மண்ணெண்ணெய் உட்பட எரிபொருள் விலைகளை அதிகரிக்கக் கோரிக்கை

எரிபொருள் விலையை மீண்டும் அதிகரிக்கும் கோரிக்கை ஒன்றை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திறைசேரி முன் வைத்துள்ளது. எனினும் மாதாந்த விலை திட்டங்கள் குறித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பரிந்துரை குழு மூலம் வழங்கப்பட்ட யோசனைகளுக்கு அரசாங்கம் இதுவரை பதில்வழங்க வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை ரூபா 6.50 னாலும், டீசல் லீற்றர் ஒன்றின் விலை 9 ரூபாவினாலும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை ரூபா 23.50 னாலும் அதிகரிக்க வேண்டும் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சந்தையில் தற்போது பெற்றோல் லீற்றர் ஒன்று 93.00 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதுடன் டீசல் 61.00 ரூபாவிற்கு விற்பனைசெய்யப்படுகின்றது. மண்ணெண்ணெய் ரூபா 43.50 விற்கு விற்பனை செய்யப்படுகின்றது சர்வதேச சந்தையில் பெற்றோலியத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் இலங்கையிலும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படவேண்டியுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழ்நிலை காரணமாகவே சர்வதேச சந்தையில் எரி பொருள் விலை அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

## நாட்டைப் பிரிக்க முனையும் சக்திகளுக்கெதிராக மக்களை அணிதிரட்ட தயாராகிறதாம் ஜே.வி.பி.

நாட்டைத் துண்டாட முனையும் உள்நாட்டு, வெளி நாட்டு சக்திகளிடமிருந்து நாட்டின் இறைமையையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கும் வகையில் மக்களை ஒன்றுதிரட்டி தயார்ப்படுத்த ஜே.வி.பி.நடவடிக்கை எடுத்துவருகிறது.

ஜே.வி.பி.தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனை அறிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடு எதிர்நோக்கியுள்ள சவாலை முறியடிக்க சகல சக்திகளையும் ஒன்றிணைக்க ஜே.வி.பி. பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது. அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் ஏனைய கட்சிகள் மற்றும் அமைப்புக்களையும்த ஏகாதிபத்திய பிரிவினைவாதத்துக்கு எதிராகச் செயற்படும் தனிநபர்களையும் கூட ஒன்றிணைக்க ஜே.வி.பி. பேச்சுக்களை நடத்தவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மற்றும் அதன் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜே.வி.பி ஏற்கனவே இது தொடர்பாக பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

2005 செப்ரெம்பர் மாதம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மஹிந்த சிந்தனையில் உள்ளவற்றையே அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது குறித்து ஜே.வி.பி உறுதியாகவுள்ளது.

இவ்வாறு சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார். இது விடயத்தில் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தவுடன் நாட்டு மக்களைத் தயார்ப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகுமெனவும் அவர் தெரிவித்தார். (அ)

## கருத்துரை

யாழ்ப்பாணம் காண்பியக்கலைகளுக்கான கற்கைப் புலம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் 'யாழ்ப்பாணத்துக் கம்பனி ஓவியங்கள்,காட்சிப் பண்பும் பாணியும்' என்ற தலைப்பிலான ஓவியர் தா.சனாதனனின் கருத்துரை நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது. (அ)

## உள்ளூராட்சி வாரவிழா

(துன்னாலை)

வடமராட்சி தெற்கு ,மேற்கு பிரதேச சபையினர் கடந்த திங்கட்கிழமை முதல் உள்ளூராட்சி வார நிகழ்வினை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

தமது எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பொதுக்கிணறுகளுக்கு குளோரின் இடுதல், கட்டாக்காலி நாய்களை அழித்தல், நெல்லியடிப் பொதுச்சந்தையை ஊழியர்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல், அலுவல வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகளை நாட்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். (ச-101)

## மீண்டும் சட்டவிரோத மண் அகழ்வு தடுத்துநிறுத்த மக்கள் கோரிக்கை

வடமராட்சிப் பகுதியில் உள்ள வல்லிபுரம், செட்டியகாடு, குடத்தனை பகுதிகளில் சட்டவிரோதமாக மணல்அகழ்வு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகளும் காணி உரிமையாளர்களும் கவலை வெளியிட்டுள்ளனர். கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும் இச் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவேளை விடுதலைப் புலிகளின் சூழல் வளம் பேணும் பிரிவினர் அவர்களை பளை பகுதிக்கு அழைத்து தடுத்து வைத்திருந்ததுடன் கடுமையான எச்சரிக்கையின் பின்னர் விடுதலை செய்தனர். அவர்களில் பலர் மீண்டும் இச்சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது. இவர்களின் இச் செயல்பாட்டினால் அப் பகுதிகளுக்குள் கடல்நீர் உட்புகுந்துவிடும் அபாயம் தோன்றியுள்ளதாகவும், உடனடியாக இதனை சம்பந்தப்பட்டவர்கள் தடுத்து நிறுத்தும் படியும் பிரதேச வாசிகள் கோருகின் றனர்.(து-101)

## "எயிட்ஸ்" வைரஸ் பரவுவதைத் தடுக்க தேசிய வேலைத்திட்டம்

HIV வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு தேசிய வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.


தேசிய எயிட்ஸ் சபையின் ஆரம்ப நிகழ்வுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று நடைபெற்றது. எயிட்ஸ் ஆட்கொல்லி எதிர்காலத்தில் இலங்கையை தாக்கவல்ல பாரிய அனர்த்தமாக கண்டறியப்பட்டுள்ளது. HIVவைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு மஹிந்த சிந்தனையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த உறுதி மொழிக்கு இணங்க இதற்கான தேசிய சபையை அரசாங்கம் நிறுவியுள்ளது. பிராந்தியத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில்HIV பரவுவது குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இதனை மேலும் பரவ விடாமல் தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக ஜனாதிபதி இந்த நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார். HIV வைரஸ் பரவாமல் இருப்ப தற்காக பல விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டதாக அங்கு உரையாற்றிய HIV எயிட்ஸ் சபையின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

இந்த திட்டத்திற்கு உலக வங்கி, யுனிசெவ் அமைப்பு, உலகசுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட அமைப்புக்களினதும் அரச சார்பற்ற மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களினதும் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும்.


HIV தொற்றியவர்களை இனம்கண்டு அவர்களை பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். எயிட்ஸ் நோய் பற்றி மக்களுக்கு விளக்கமளிக்கும் திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படும். (அ-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



எந்தச் செயல் புரிந்தாலும் நான் செய்கிறேன் என்ற எண்ணத்தை விட்டு 'இறைவனே உன் பணி செய்கிறேன். நீயே கர்த்தா. நான் உன் கருவியாக இருந்து செய்கிறேன்' என்ற எண்ணத்தில் வாழ வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்



அகதிகளுக்கான ஐ.நா.ஆணையாளர் அன்டோனியோ குற்றரஸ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது...

# வெருகலாறு கால்வாயைத்திறக்க மூன்று கோரிக்கைகள் முன்வைப்பு

திருகோணமலை சேருவில வெருகலாறு கால்வாயைத் திறப்பதற்கு பொதுமக்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரை பொதுமக்கள் சந்தித்தபோது நீரைத்திறந்து விடுவதற்கு இக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

*மூதூர் கிழக்குப் பகுதி மக்களின் குடிநீர்ப்பிரச்சினையை தீர்ப்பதற்காக நீர்த்தாங்கி அமைக்கப்படவேண்டும்.

*மூதூர் கிழக்கு ஈச்சிலம்பற்றுப் பகுதிகளுக்கு மக்கள் இராணுவச்சோதனை அரண்கள் வழியாக பயணம் செய்கின்றபோது அம் மக்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும்.

*பொருளாதாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளிடம் மக்கள் முன்வைத்துள்ளனர்.

இக் கோரிக்கைகளை நிறைவேற்ற உறுதியளிக்கின்ற உறுதிப்பாடு கிடைத்தவுடன் மாவிலாறு அணைக்கட்டு நீரை திறந்து விட முடியும். என்று கண்காணிப்புக்குழுவிடம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வெருகலாறு கால்வாய் விவகாரம் குறித்து திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனையும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சந்தித்துள்ளனர். (ச-5)

# நீர்விநியோகம் தடைப்பட்டதால் பொதுமக்கள் கடுமையான பாதிப்பு

## நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

மாவிலாற்றில் இருந்து குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத்திற்கான நீர் விநியோகம் விடுதலைப்புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பது அந்த பகுதியில் உள்ள மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது என இலங்கை அரசின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் அமுலில் உள்ள நிலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மூலம் இது குறித்து விடுதலைப்புலிகளிடம் பேசி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட பொதுமக்கள் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள இலங்கை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து சில அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளார்கள் எனவும் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்.

இந்த அணை மூடப்பட்டதால் சுமார் 32 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாதிப்படைந்துள்ளது எனவும் இந்தப் பிரச்சினையை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு அப்பாற்பட்டு ஒரு மனிதாபிமான விடயமாக மாறியுள்ளது எனவும் அவர் கூறினார்.(ச-5)

# முல்லைத்தீவு மீனவர்கள் மீது நேற்றும் கடற்படை தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்றொழிலாளர் மீது கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கரையில் இருந்து சுமார் ஒரு கடல் மைல் தொலைவில் நேற்றுக்காலை இத் தாக்குதல் நடைபெற்றது.

இச் சம்பவத்தில் சூசைப்பிள்ளை தேவதாஸ் (வயது 55) என்பவரின் படகு சேதமடைந்ததுடன் தொழில் வலைகளையும் இழந்து தாக்குதலில் இருந்து உயிர் தப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முல்லைத் தீவு கடற்றொழிலாளர் சமாசம் முறைப்பாடு செய்துள்ளது. (ச-5)

# எச்.என்.டி.எ. மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறியினை மேற்கொண்டு இறுதி வருட முதலாம் அரையாண்டிற்கான மீள் பரீட்சை எழுதிய மாணவர்களை நாளை காலை 10 மணிக்கு நிறுவனத்தில் ஒன்று கூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நிதி முகாமைத்துவ பாடநெறிக்கான மீள் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

# கொழும்பில்...

மோர்க் குண்டுகளைத் தயாரிக்க கொண்டு வரப்பட்டவையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த தரகர் ஒருவர் இவற்றைத் தனக்குக் கொண்டு வந்து கொடுத்ததாக விடுதியின் உரிமை யாளர் தெரிவித்துள்ளார்.

அவற்றை விற்பனை செய்வதற்காகவே அங்கு கெண்டு வந்ததாகவும் அவர் கூறியுள்ளார். (ச-5)

# மட்டக்களப்பில் கிபீர் தாக்குதல்...

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரைப் பிரதேசத்தில் உள்ள கதிரவெளியில் நேற்று மாலை கிபீர் விமானங்கள் நடத்திய விமானத்தாக்குதலில் விடுதலைப்புலிகளின் தரப்பில் ஐந்து போராளிகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மாவிலாறு அணைக்கட்டு கடந்த ஒரு வாரமாக மூடப்பட்டுள்ள நிலையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையே தோன்றியுள்ள இறுக்கமான சூழலில் 2 ஆவது நாளாக இந்த விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

இத் தாக்குதல் காரணமாக அப் பகுதியில் பெரும் பதற்றம் எற்பட்டுள்ளது. நேற்று மாலை மூன்று தடவைகள் கிபீர்த்தாக்குதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான ஈச்சிலம்பற்றுப் பகுதியில் நேற்று கிபீர்த்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இதில் ஏற்பட்ட விபரம் குறித்து எதுவும் தெரியவரவில்லை.

இது இவ்வாறிருக்க முல்லைத்தீவிலும் விமானப்படையினரின் கிபீர்க்குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளன.

காலை 9 மணியளவில் முல்லைத்தீவு நகரையும் அதனை அண்டிய பிரதேசங்கள் மீதும் இரண்டு தடவைகள் தாக்குதல்கள் நடத்தியுள்ளன.

இத் தாக்குதலில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# கிளைமோர்த்...

இதேவேளை வேறொரு மோட்டார் சைக்கிளில் வந்த மற்றொருவர் தோட்டவெளிப் பரப்பிற்குள் தூக்கி வீசப்பட்டதால் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்.

சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி சறோஜினி இளங்கோவன் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு அச்சுவேலிப்பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(து-15,35,104,133)

# நாட்டில் சமாதானம் வேண்டி...

டவாறு சமயங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டு அமையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தின் சமாதான நிகழ்ச்சித்திட்டப்பிரிவினரின் ஒருங்கமைப்பின் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம், நல்லை ஆதீனம், யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்,

யாழ்.இந்து சமயப் பேரவை, தென்னிந்திய திருச்சபை, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்,கத்தோ லிக்கத் திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, யாழ். பௌத்த நாகவிகாரை மத்தியஸ்தானம் மற்றும் யாழ்.மாவட்ட இஸ்லாமிய உலாமா சபை ஆகிய சமய அமைப்புக்கள் இவ் அமையத்தில் இணைந்துள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள சர்வமதப்பிரார்த்தனை,சர்வமதத்தலைவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும்.

இந் நிகழ்வில் சகல மதத்தைச்சேர்ந்த மக்களும் தங்களது வழிபாட்டு முறைப்படி பிரார்த்தனையில் பங்குபற்றி மனித இனத்தின் சகவாழ்வையும் சமாதானத்தையும் அடையப்பிரார்த்திப்போம் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை நீங்கி சகல மக்களும் சாந்தி சமாதானத்துடன் சுமுகமாக வாழ்வதற்காக நடைபெறவுள்ள இவ் அமைதிவழிப்பிரார்த்தனையுடன் சர்வமத வழிபாட்டுத் தலங்களிலும் நண்பகல் வழிபாடுகளை நடாத்தி பிரார்த்தனை நிகழ்விற்கு சர்வமதங்களினதும் இறையருள் கிடைக்க வலுச்சேர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ச-5)

# ரோந்து சென்ற...

ருந்ததாகவும் அக்கடையின் உரிமையாளர் காலை கடையைத் திறந்து சுவாமி படத்திற்கு விளக்கேற்றி பிரார்த்தனை செய்து கொண்டிருந்த நேரத்திலேயே கிளைமோர் வெடித்ததாகத் தெரிகிறது.

காயமடைந்த இரு பொதுமக்களில் இவரும் ஒருவராவார். கடை உரிமையாளர் ரி.பாலசுப்பிரமணியம் (வயது 55), யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர் எஸ்.கிருஸ்ணமூர்த்தி (வயது 50) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் கிருஸ்ணமூர்த்தி அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவத்தையடுத்து வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதுடன் யாழ்.நகரப்பகுதியில் உள்ள சில காவலரண்களில் இருந்தும் சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தையடுத்து அண்மையில் இருந்த பன்முக வர்த்தக களஞ்சியத்தினுள் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த மூன்று ஊழியர்களைத் தாக்கினர்.

படுகாயமடைந்த அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மிருசுவிலைச் சேர்ந்த ஆர்.ரவீந்திரன் (வயது 24) ,களபூமி காரைநகரைச் சேர்ந்த எஸ்.புண்ணியமணியம் (வயது 47) ,காரை நகரைச் சேர்ந்த கே.தயாபரன் ஆகிய மூவருமே இத் தாக்குதலில் காயமடைந்தவர்களாவர். (து-15,35,104,133)

# சுப்பர்மடம்...

சேர்ந்த சுப்பர்மடம் கடற் றொழிலாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் கந்தையா சித்திரவடிவேல் (வயது 59) என் பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

அவரது வீட்டில் இருந்து 200 மீற்றர் தொலைவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதேவேளை சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அரியநாயகம் சடலத்தைப்பார்வை யிட்டதுடன் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை மந்திகை மருத்துவ மனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார். இதேவேளை சடலத்திற்கு அருகில் எல்லாளன் படை உரிமைகோரிய அட்டை ஒன் றும் காணப்பட்டது.

(து-15,35,52,104,133)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 28.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.